## 27.1 பரிசுகள் – மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் சிறந்த ஊராட்சிகள் / ஊராட்சி ஒன்றியங்கள் / மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றிற்கு பரிசு அளிக்கும் திட்டம்

---

ஊரக வளர்ச்சித் துறை

அரசாணை (நிலை) எண். 97 நாள் : 1.6.1999

படிக்க :

ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் எண்.112525/98/பிசிஏ.3, நாள்.16.2.99.

**ஆணை**

உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனைக் கூட்டவும் அமைப்பை வலுப்படுத்துவதற்கும் ஏதுவாக அரசு ஊக்க நிதியின் ஒரு பகுதியை, அரசால் அமைக்கப்படுகின்ற குழுக்களால் தேர்வு செய்யப்படும் மூன்றடுக்கு உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் அலுவலர்களுக்கு பரிசுகள் அளிக்கலாம் என மாநில நிதி ஆணையம் பரிந்துரை செய்துள்ளது. இந்த பரிந்துரையை ஏற்றுக்கொண்டு உள்ளாட்சி அமைப்புத் தலைவர்களுக்கும், பணியாளர்களுக்கும் பரிசு வழங்குவதன் மூலம் உள்ளாட்சி அமைப்பின் பணிகளை மேலும் சிறப்புறச் செய்யலாம் என்று அரசு கருதியது. ஏனவே, இது குறித்து ஊரக வளர்ச்சி இயக்.குநரின் செயல்குறிப்பு பெறப்பட்டு அதனை அரசு நன்கு ஆய்வு செய்து கீழ்க்கண்ட ஆணைகளை வெளியிடுகிறது.

அ. மாவட்ட அளவில் மூன்று ஊராட்சிகள், மூன்று ஊராட்சி ஒன்றியங்கள், மாநில அளவில் மூன்று மாவட்ட ஊராட்சிகள், மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மூன்று ஊராட்சி மன்றங்களை சிறந்தவையாக ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்து அவற்றிற்கு இணைப்பு–1ல் குறிப்பிடப்பட்டுலூளவாறு பரிசுத் தொகை வழங்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்படுகிறது.

ஆ. இணைப்பு –1ல் குறிப்பிடப்பட்டுலூளவாறு பரிசுத் தொகைகள் வழங்க மாவட்டங்கள் மற்றும் மாநில அளவில் விழாக்கள் நீடித்த ரூ.10.00 இலட்சமும் (மாவட்ட அளவில் விழா நடத்த ரூ.25000x28=7.00 இலட்சம், மாநில அளவில் விழா நடத்த ரூ.3.00 இலட்சம்) மற்றும் அவ்விழாக்களில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு தகுதியுரை மற்றும் பதக்கங்கள் (Citation and Medals) வழங்க ரூ.3.54 இலட்சத்திற்கு அரசு அனுமதி அளிக்கிறது.

இ. மாவட்ட அளவிலான சிறந்த உள்ளாட்சி அமைப்புகளைத் தேர்வு செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு குழு அமைக்கப்படவேண்டும். அக்குழுக்களில் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு இருத்தல்வேண்டும்.

தலைவர் : மாவட்ட ஆட்சியர்

உறுப்பினர்கள்

1. கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி)/ திட்ட அலுவலர் – மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
2. மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் ஒரு சட்டமன்ற உறுப்பினர்.
3. மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் ஒரு சமூக சேவர்
4. தேர்வுக்குழு தலைவர் மற்றும் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் தொடர்பாக பாடுபடும் அரசு சாரா தன்னார்வு தொண்டு நிறுவனம்
5. அந்தந்த மாவட்ட ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)

ஈ. மாநில அளவிலான சிறந்த உள்ளாட்சி அமைப்புகளைத் தேர்வு செய்ய ஒரு குழு அமைக்கப்படவேண்டும். அக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி இருத்தல் வேண்டும்.

தலைவர் : ஊரக வளர்ச்சித் துறை செயலாளர்

உறுப்பினர்கள்

1. ஊரக வளர்ச்சி இயக்குநர்
2. அரசால் நியமிக்கப்படும் ஒரு சமூக சேவகர்
3. அரசால் நியமிக்கப்படும் உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்காக உழைக்கும் அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனம்
4. அரசால் நியமிக்கப்படும் ஒரு சட்ட மன்ற உறுப்பினர்

## 27. AWARDS AND FUNCTIONS

உ. சிறந்த உள்ளாட்சி அமைப்புகளை தேர்வு செய்து விருது வழங்குவதற்காக கால அட்டவணை இணைப்பு –2ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி இருத்தல் வேண்டும்.

2. மேலே பத்தி ஒன்று (அ) முதல் (இ)–ல் கண்டுள்ள இனங்களை உடனடியாகச் செயல்படுத்துமாறு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலே பத்தி ஒன்று (ஈ)–ல் காட்டியபடி தேர்வுக்குழு அமைக்க அரசு அளவில் தனியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

3. மேலே பத்தி 1 (அ) மற்றும் (ஆ)–ல் ஆணையிடப்பட்டுள்ளபடி ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் மொத்த செலவினமான ரூ.1,95,54,000/– (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஐந்து இலட்சத்து ஐம்பத்தி நான்காயிரம் மட்டும்) மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி ஆண்டுதோறும் ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் சமன்பாடு மற்றும் ஊக்க நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்து, தனியாக ஆணைகள் வெளியிடப்படும்.

4.இவ்வாணை நிதித்துறையின் அ.சா.குறிப்பு எண்.39919/ஊரக வளர்ச்சி /99–1, நாள்.28.5.99 மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**
அரசு செயலாளர் (பொறுப்பு)

**இணைப்பு –1**

பரிசுத் தொகை விவரம்

மாவட்ட அளவில் 3 சிறந்த ஊராட்சிகளுக்கான பரிசு

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | – | ரூ.1.00 இலட்சம் | |
| இரண்டாம் பரிசு | – | ரூ.0.50 இலட்சம் | |
| மூன்றாம் பரிசு | – | ரூ.0.25 இலட்சம் | |
| | | ரூ. 1.75 இலட்சம் x 28 | ரூ.49.00 இலட்சம் |

மாவட்ட அளவில் 3 சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கான பரிசு

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | – | ரூ.2.00 இலட்சம் | |
| இரண்டாம் பரிசு | – | ரூ.1.00 இலட்சம் | |
| மூன்றாம் பரிசு | – | ரூ.0.50 இலட்சம் | |
| | | ரூ. 3.50 இலட்சம் x 28 | ரூ.98.00 இலட்சம் |

மாநில அளவில் 3 சிறந்த மாவட்ட ஊராட்சிகளுக்கான பரிசு

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | – | ரூ.10.00 இலட்சம் | |
| இரண்டாம் பரிசு | – | ரூ.5.00 இலட்சம் | |
| மூன்றாம் பரிசு | – | ரூ.3.00 இலட்சம் | |
| | | ரூ.18.00 இலட்சம் | ரூ.18.00 இலட்சம் |

மாநில அளவில் 3 சிறந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கான பரிசு

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | – | ரூ.6.00 இலட்சம் | |
| இரண்டாம் பரிசு | – | ரூ.3.00 இலட்சம் | |
| மூன்றாம் பரிசு | – | ரூ.2.00 இலட்சம் | |
| | | ரூ.11.00 இலட்சம் | ரூ.11.00 இலட்சம் |

மாநில அளவில் சிறந்த ஊராட்சி மன்றங்களுக்கான பரிசு

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு | – | ரூ.8.00 இலட்சம் | |
| இரண்டாம் பரிசு | – | ரூ.2.00 இலட்சம் | |
| மூன்றாம் பரிசு | – | ரூ.1.00 இலட்சம் | |
| | | ரூ.6.00 இலட்சம் | ரூ.6.00 இலட்சம் |
| | | மொத்தம் | ரூ.182 இலட்சம் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**
அரசு செயலாளர் (பொறுப்பு)

**இணைப்பு –2**

ஊராட்சி அமைப்புகளுக்கு விருது வழங்குவதற்கான கால அட்டவணை

| மாவட்ட அளவில் | | இறுதி நாள் |
|---|---|---|
| விண்ணப்பங்கள் வரவேற்று ஏற்றுக்கொள்வது. | : | மே மாதம் 30–ம்நாள் |
| விண்ணப்பங்கள் பரிசீலனை செய்வது | : | ஜீலை மாதம் 31–ம் நாள் |
| விருதுக்கு தேர்வு செய்வது | | |
| பரிசு வழங்குதல் | : | ஆகஸ்ட் 31–ம் நாள் |
| | | |
| மாநில அளவில் | | |
| மாவட்டத்தின் மூலம் விண்ணப்பம் | : | ஆகஸ்ட் 31–ம் நாள் |
| விண்ணப்பம் பரிசீலனை செய்வது | : | செப்டம்பர் 30–ம் நாள் |
| விருதுக்கு தேர்வு செய்வது | | |
| பரிசு வழங்குதல் | : | அக்டோபர் 31–ம் நாள் |

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். மாலதி**
அரசு செயலாளர் (பொறுப்பு)